1992 மார்ச் 13]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சிகள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 விழுக்காட்டை ஏற்கனவே முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதுவரையில் அதில் ஏதாவது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் எந்தெந்தத் துறைகளில் எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 201 அரசுத் துறைகளில், அரசுத் துறை நிறுவனங்களில் 130 துறைகளிடமிருந்து பதில் வந்துள்ளது. இதன்படி 2,657 பெண்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பீட்ரிக்ஸ் டி. சோசோ.

Dr. BEATRIC D'SOUZA : Hon. Speaker, Sir, will the Hon. Minister for Social Welfare relax the age limit to give priority to certain categories of women—destitute women, single mothers and young widows—who need employment?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உடல் ஊனமுற்ற பெண்களுக்கு அந்தச் சலுகை இருக்கிறது. மற்றவர்களுக்கு மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 214, திரு. கே. முனிவெங்கடப்பன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

214—

சத்துணவு அமைப்பாளர்களை ஆசிரியர்களாக நியமித்தல்.

*5072 திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஓராண்டு பயிற்சி கொடுத்து அவர்களை ஆசிரியர்களுக்கு உதவியாக பள்ளியில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அவர்களுக்கு ஆசிரியர் சம்பளத்தில் பாதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அப்படிப்பட்ட திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கே இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனி வெங்கடப்பன். இருக்கையில் இல்லை.

வினா எண் 215 திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

215—

கால்நடைக் கிளை மருத்துவமனைக்குக் கட்டிடம்.

*481 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) ஆலங்குளம் ஒன்றியம், அச்சங்குட்டம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவ மனைக்குக் கட்டிடம் இல்லாமல் பஞ்சாயத்துக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கட்டிடம் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆலங்குளம் ஒன்றியம், அச்சங்குட்டம் கிராமத்தில், கால்நடை கிளை மருத்துவமனை ஆலங்குளம் பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த இலவச கட்டிடத்தில் இயங்கி வருகிறது,